செ.வெ.எண் : 329 நாள் : 05.06.11

## <u>பத்திரிக்கை செய்தி</u>

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் ஜீன் மாதம் 5 ம் நாள் "உலக சுற்றுச்சூழல் தினம்" கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தை சிறப்புடன் கொண்டாட சுற்றுச்சூழல் துறையும் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் ஏற்பாடு செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் செயல்திட்டக் குழுவின் சார்பாக இவ்வாண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தினை **<u>"வனங்கள்: இயற்கை உங்கள் சேவையில்" (Forests: Nature at your service)</u>** என்ற பொருளினை மையக் கருத்தாக வைத்து நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்ய வலியுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு தொடர்பான கருத்துக்களை பொதுமக்களின் மத்தியில் எடுத்துச் செல்லும் விதமாக ஜீன் மாதம் 5 ம் நாள் தமிழகத்தின் பள்ளிகளில் இயங்கிவரும் தேசிய பசுமைப்படை சூழல் மன்றங்கள் மூலமாக பேரணிகள், மனிதச் சங்கிலி, சூழல் குறித்த போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று காலை 10.00 மணிக்கு கோட்டூர்புரம் பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளாகத்தில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் கோட்டூர்புரம் பிர்லா கோளரங்கிலிருந்து சென்னை மற்றும் காஞ்சிபுர கல்வி மாவட்ட தேசிய பசுமைப்படையைச் சார்ந்த 150 பள்ளி மாணவ, மாணவியர்கள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த பதாகைகளை ஏந்தி சூழல் பாதுகாப்பு, மேலாண்மையை வலியுறுத்தும் வாசகங்களை முழங்கி கிண்டி சிறுவர் பூங்கா வரை அணிவகுப்பு நடத்தப்பட்டது. மாண்புமிகு செய்தித்துறை மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு ஜி. செந்தமிழன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும்

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு டி.கே.எம். சின்னையா அவர்கள் மரக்கன்றுகளினை நட்டு, சுற்றுச்சூழல் பேரணியை தொடங்கி வைத்தார்கள். அதன் பின்னர் கிண்டி சிறுவர் பூங்காவில் பள்ளி மாணவர்களால் சூழல் குறித்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைச் செயலர் (பொ.) திரு. விஸ்வாநத் ஷெகாங்வர் இ.ஆ.ப., தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., சுற்றுச்சூழல் துறை இயக்குநர் திரு டி.எஸ். சீனிவாசமூர்த்தி, இ.வ.ப., திரு எஸ். இராமச்சந்திரன், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர். பேரணி மற்றும் இந்நிகழ்ச்சிகளில் சுற்றுச்சூழல் கல்வி மையம், தமிழ்நாடு அறிவியல் கூட்டமைப்பு போன்ற நிறுவனங்களிலிருந்து சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சூழல் துறை இயக்குநருக்காக

2/2

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.